கிடைக்கும், பொதுமக்களுக்கும் வசதியாக இருக்கும். எனவே எங்கள் பகுதியில் இதை அமைத்துக் கொடுக்க அரசு முன்வர வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் வேளாண்மைத்துறையும், தோட்டக்கலைத் துறையும் ஆய்வு செய்து வருகின்றன. எந்த எந்தப் பகுதியில் எந்தெந்தப் பயிர்கள் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன என்பதை ஆய்வு செய்ததற்குப் பின்னால் பல்வேறு தொடர் நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கக்கூடிய பகுதியில் காய்கறிகள் பயிரிடப்பட்டு அவை அருகிலிருக்கின்ற கேரள மாநிலத்திற்குச் செல்வதாகக் கூறினார்கள். மகிழ்ச்சி. அனைத்து வசதிகளையும் அரசாங்கமே செய்து கொடுக்கிற பணியில் ஈடுபட முடியாது. எனவே தனியார் இதுபோன்ற தொழில்களைத் துவங்க முன்வந்தால் அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் அரசாங்கம் செய்து தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. வ.மு. சுப்பிரமணியம், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்.

11—

ஒரே வரி விதிப்பு முறையைக் கையாளுதல்

***35160*—திரு. வ.மு. சுப்பிரமணியம் :**

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விற்பனை வரி, உபரி வரி, உபரி மேல் வரி, கூடுதல் வரி இவை அனைத்தையும் இணைத்து ஒரே வரி விதிப்பு முறையைக் கையாள அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விற்பனை வரி, உபரி வரி, உபரி மேல் வரி, கூடுதல் வரி இவைகளை ஒருங்கிணைத்து ஒரே வரிவிதிப்பு முறையைக் கொண்டு வருவதற்கு அரசு தற்போது தயாராக இல்லை.

(ஆ) இப்போது விளக்கம் தேவையில்லை.

1994 நவம்பர் 4]

திரு. வ.மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி என்று சொல்லிக்கொண்டு விற்பனையாளர்களிடமிருந்து தான் அந்தப் பணத்தை வாங்கவேண்டும் என்பது முறை. ஆனால் அந்த வரியை எல்லாம் வசூலிப்பது வாங்குவோரிடமிருந்துதான். அவர்கள்மீதுதான் அந்த விற்பனை வரிச்சுமை சுமத்தப்படுகிறது. ஆக அந்த விற்பனை வரி, உபரி வரி, உபரி மேல் வரி ஆகியவை எல்லாம் பொதுமக்களிடமும், பயனாளிகளிடமும் இருந்து வசூலிக்கப்படுகிற காரணத்தால் ஒரே வரியாக அதனை விற்பனை செய்பவரே செலுத்துகிற ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்பதை அமைச்சரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி, உபரி வரி, உபரி மேல் வரி ஆகிய இவைகளை வாங்குபவர்களே செலுத்த வேண்டும். கூடுதல் வரியை விற்பனையாளர்களே, அதாவது ரூபாய் 10 இலட்சத்திற்கு மேல் விற்பனை செய்யக்கூடியவர்கள் அவர்களே தங்களுடைய வருவாயிலிருந்து செலுத்த வேண்டி இருக்கிறது. இதனை ஒருங்கிணைத்து முழு வரித்தொகையையும் வாங்குபவர்களிடம் இருந்தே வசூல் செய்வதற்கான உரிமையை வழங்கும் வகையில் கேட்டு வரி சீரமைப்புக் குழுவிடம் முறையீடு வரப்பெற்றது. அதனை வரி சீரமைப்புக் குழு பரிசீலனை செய்து தற்போதைக்கு இதனை நடைமுறைப் படுத்துவது சாத்தியம் இல்லை என்று முடிவு எடுத்துள்ளது. அதிகமான தொகைக்கு வியாபாரம் செய்யக் கூடிய வணிகர்கள் இந்த கூடுதல் வரியை உபயோகிப்பாளர்களிடமிருந்து வசூல் செய்யக்கூடிய சாத்தியக்கூறு ஏற்பட்டுவிடும் என்பதால் இது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நாடு முழுவதும் ஒரே வரிவிதிப்பு முறையை அதாவது 'வேல்யூ ஆடட் டாக்ஸ்' முறையை அமல் படுத்தவேண்டும் என்று மத்திய அரசு மாநில அரசுகளை அழைத்து பேசிக்கொண்டிருக்கிறது. இதில் ஒரு முடிவு வரும் வரையில் இந்த வரி ஒருங்கிணைப்பு முறையை நிறுத்தி வைக்கலாம் என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ.மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் ஒரே முறை கொண்டுவருவது என்பது மகிழ்ச்சி. ஆனால் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொருவிதமான வரி என்கிற நிலையில் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான வரி ஒரு

பொருளுக்குக் கொண்டுவருகிற சாத்தியக்கூறு இருக்குமா என்பதில் ஐயப்பாடு உள்ளது. இருந்தாலும் உபரி வரி, உபரி மேல் வரி போன்றவற்றை பெரும்பாலும் பயனாளிகளிடமிருந்துதான் வசூலிக்கிற நிலைமை இருக்கிறது. ஒரு ஹோட்டலில் அல்லது விடுதியில் யாராவது தங்கினாலும் கூட அந்த விடுதிக்காரர் உபரி வரி, உபரி மேல் வரி ஆகியவற்றைக் கட்டுவதில்லை. அங்கே யார் பயனாளிகளோ அவர்களிடம் இருந்துதான் அது வசூலிக்கப்படுகிறது. எனவே அதை நிறுத்தி வைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற வரி விதிப்பு முறையில் உபரி வரி, உபரி மேல் வரி ஆகிய இந்த இரண்டு வரிகளையும் பொறுத்தவரை பில் போடும் போது தனித்தனியாகத்தான் எழுதுகிறார்கள். அதில்தான் வித்தியாசமே தவிர இதை ஒருங்கிணைப்பதால் யாருக்கும் எந்தவிதமான நஷ்டமோ அல்லது இலாபமோ கிடையாது. ஆகவே தற்போதைக்கு இதை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

முற்பகல் 10-40

12—

தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளின் தூய்மையைப் பாதுகாத்தல்

***16296—திரு. ப. ரங்கநாதன் :**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஏரிகளின் தூய்மையைப் பாதுகாக்க பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான பெரிய சிறிய ஏரிகள் ஆறுகள் ஆகியவற்றில் தூய்மை பொதுவாக நன்கு பராமரிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள